# தூதன்

தூதன்-27 மார்ச் 2018 தூது-3

கிறிஸ்துவின் மகிமைவெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். 1 பேதுரு 4:13

## கடவுளின் மீட்பும் பெண்களின் பங்களிப்பும்



Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| கிழர் துளிர் வசந்தம் | 14 |
| சோதனையில் சாதனை | 15 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| Young Readers Column | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| பேரீச்சமரம் | 22 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 24 |
| ஆராதனை பாடல்கள் | 25 |
| வேதவினா போட்டி | 26 |
| தெரிந்து கொள்வோம் | 28 |
| Health Tips | 30 |
| Childrens Corner | 32 |
| Birthday Celebrants | 34 |
| Wedding Anniversary Celebrants | 37 |
| Who is King Herod | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

## நிறைவாழ்வை நோக்கி (Towards fullness of life)

"நிறைவானது வரும்போது அரைகுறையானது ஒழிந்துபோம்"
1 கொரிந்தியர் 13:10 / 1 Corinthians 13:10

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

நிறைவாழ்வின் நாயகர் இயேசுகிறிஸ்துவின் இணையற்ற திருப்பெயரில் வாழ்த்துக்கள். 2018-ம் ஆண்டை உலகத் திருமறை மாமன்றம் 'வாழ்வை நோக்கிப் பயணிக்கும்' ஆண்டாகக் கொண்டாட அழைத்திருக்கிறது. அதின் ஒரு பரிமாணமான நிறைவாழ்வை நோக்கிய பயணத்தைத் திருமறையின் வெளிச்சத்தில் புரிந்துகொள்ள முயற்சிப்போம். இன்றைய நவீன உலகில் நொடிக்கு ஒரு பாதிப்பு உண்டாகிறது; நிமிடத்திற்கு ஒரு புதிய கண்டுபிடிப்பு உருவாகிறது, மணிக்கு ஒரு மாறுதல் ஏற்படுகிறது. ஆனாலும் இவையனைத்தும் மனித வாழ்விலும், படைப்பின் இசைவான வாழ்விலும் நிறைவு தருகிறதா? இல்லையே. மனிதர் இன்னமும் நிறைவை நோக்கிய பயணத்துடன்தான் நகர்கின்றனர். திருப்தி என்பது எப்போதும் ஏற்படாத சூழ்நிலையில், புதியவற்றை அடையும் வேகமும் தாகமும் வாழ்வின் ஆக்கத்தைவிட அழிவிற்கு அதிகமாய் அழைத்துச்செல்லும் சூழ்நிலையில், நிறைவாழ்வை நோக்கிய நிலையான நகர்வு அவசியமாகிறது. வாழ்வு தரும் நூலாம் திருமறையின் வெளிச்சத்திலே நிறைவாழ்வை நோக்கி நகருவோம்; அனைவரையும் நகர்த்துவோம். (Inspite of the drastic changes, tremendous inventions, new creations on earth and space the life is not satisfied and is not moving towards fullness. But it is possible only through the joining of hands under the guidelines of the word of God).

### திருமறை கூறும் நிறைவாழ்வு (Fullness of life in Bible):

பழைய ஏற்பாடு எனப்படும் முதல் உடன்படிக்கையின் மொழியான எபிரேயத்தில் மெலோ (melo) என்கிற பதம் பெரும்பான்மையான இடங்களில் முழுமை அல்லது நிறைவு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வார்த்தைக்கு "அனைத்தும், எல்லாவற்றையும் உள்ளடக்கிய, முழுநிறைவான, அளவிடப்படாத திரளான" என்று பல பொருட்கள் உள்ளன. (The Hebrew word Melo denotes 'all, including everything, Fullness or abundance, uncountably multitude,... so on and so forth). புதிய ஏற்பாடு எனப்படும் இரண்டாம் உடன்படிக்கையின் மொழியான கிரேக்கத்தில் ப்ளெரோமா (Pleroma) என்ற பதம் "எல்லாவிதமான, முழுவதுமான, முழுநிறைவான" என்று பல

பொருள்களில் உணரப்படுகிறது. (The greek word Pleroma means 'all kinds of, totality of, fullness or abundance ... so on & so forth).

இதனடிப்படையில் நோக்கும்போது முழுநிறைவு என்கிற சொல் திருமறையில் பல இடங்களில் உறுதியான நிலைப்பாட்டையும், வேறு பல இடங்களில் பொருட்களின் நிறைவையும், வேறு பல இடங்களில் குணங்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுமாத்திரமல்ல, நிறைவு (full) என்பது குறைவை (scarcity) நீக்குவதாகவும், ஒன்றுமில்லாமையைப் (emptiness) போக்குவதாகவும், முடியாதவற்றை (impossible) முடிந்ததாக்குவதாகவும், நிறைவற்றதை (incomplete) முழுமையாக்குவதாகவும் புரிந்துகொள்ளப்படுகிறது. உன் கடவுளாகிய கர்த்தரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்பு கூறவும், அதுபோன்ற அன்பையே பிறரிடம் காட்டவும், ஆண்டவர் இயேசு நினைப்பூட்டும்போது முழுமை என்பது உடல், மனம், ஆன்மா, இருதயம் அனைத்தையும் தொடர்புபடுத்தும் ஒன்று என்பதை உணரமுடிகிறதல்லவா! (Fullness removes scarcity, emptiness, impossibility and incompleteness. Fullness not only refers materials, qualities, but also stabilities of heart, body, mind and soul according to Bible.)

இப்படிப்பட்ட ஒரு பரந்த புரிதலோடு முழுமையான அல்லது நிறைவான வாழ்வு என்பதை திருமறையின் வெளிச்சத்திலே, சில கண்ணோட்டங்களிலே நாம் ஆய்வு செய்வோம். திருமறையை ஆய்வு செய்யாமல் ஆழங்களை அறியமுடியாது.

1.பொருளாதாரப் பார்வை (Economic view): தொடக்கநூல் ஆதியாகமம் 41:29-31,47, உபாகமம் 28:47,30:9 போன்ற வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவு (பரிபூரணம்) என்பது வாழ்வுக்குத் தேவையான அடிப்படைப் பொருட்கள் அனைத்தையும் ஆண்டவர் அருளுவதைக் குறிப்பிடுகிறது. பஞ்சம் ஏற்பட்டு பொருட்களை உற்பத்தி செய்யமுடியாத காலம் தோன்றினாலும் ஏற்கனவே நிறைவான பொருட்களைக்கொண்டு அவற்றை ஈடுசெய்யமுடியும். ஆகவேதான் நிறைவாழ்வை நோக்கிய நம் பயணத்தில் நமக்கு மட்டுமல்ல, இல்லாமையில் இருப்போரும் தம் அடிப்படைத் தேவைகளைப் பெறும்போது அப்பயணம் புனிதப் பயணமாக, அர்த்தமுள்ள பயணமாய் விளங்குகிறது. இறைவன் “மன்னா” என்கிற உணவை பாலைநிலத்தில் வழங்கும்போதும் ஒரு சமத்துவப் பகிர்வு அதில் உருவாகிறதைக் காணலாம். பொருளாதாரச் சமத்துவம் நிறைவாழ்விற்கு வழிநடத்தும். (According to Genesis 41:29-31,47; Deut.28:47, 30:9 and the provision of 'manna' in the wilderness all denote that fullness of life is in the equality of sharing food or provision of materials for all).

2. அரசியல் பார்வை (Political View): யோவான் நற்செய்தி நூல் 10:10-ன் படி ஒரு மாற்று அரசை, நிலையான இறைஅரசை நிறுவும் போதனையாக நல்ல மேய்ப்பனாக தன்னுடைய ஆடுகள் நிறைவாழ்வைக் கண்டடையவே தான் வந்ததாக ஆண்டவர் குறிப்பிடுகிறார். அதற்கு முன்னே இருந்த மேய்ப்பர்கள் கள்ளரும், கொள்ளைக்காரருமாயிருந்து சுயநலமாய் வழிநடத்திவிட்டனர். நிறைவாழ்வை நிலையான ஒரு மாற்று அரசாகவும், அதற்குரிய தலைமைத்துவ மேய்ப்பராகத் தன்னையும் முன்மொழிகிறார். அதைச் செய்தும் முடிக்கிறார் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. பேரரசான தாவீதும்கூட இறை ஆளுகையில் மட்டுமே நிறைவாழ்வின் மகிழ்ச்சியும், இன்பமும் இருப்பதாகப் பாடுகிறார் (சங்கீதம் 16:11). (Jesus also proposes an alternative state ie. Reign of God in which he provides fullness of life to the sheep as a shepherd and set a new leadership model in the midst of selfish reigns. Even King David sings the same. Ps.16:11).

3. ஆன்மீகப்பார்வை (Spiritual View) : சமீபத்தில் 99 வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்த இறையியலாளர் அருளுரைஞர் பில்லி கிரஹாம் அவர்கள் குறிப்பிடுகையில் ‘உலகின் எந்தப்பொருளும் அல்ல, இயேசுகிறிஸ்து ஒருவர் மட்டுமே நம் உள்ளத்தின் வெற்றிடத்தை நிரப்பி, நிறைவை அருளக்கூடியவர்’ என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார். எபே.3:16-19, கொலோ.3:1-25, சங்.23:5 குறிப்புகளின்படி நிறைவான வாழ்வு என்பது நமது நிறைவை ஆண்டவருக்குள் காண்பதாகும். எந்தச் சூழ்நிலையானாலும், சவாலானாலும் அந்நிறைவாழ்வை நம்மிடமிருந்து பிரிக்க இயலாது. நமது விசுவாசம் எப்போதும் கிறிஸ்துவுக்குள் உறுதிப்பட்டதாகவும், நிலையானதாகவும் இருக்கும். யோவான் நற்செய்தியாளர் (1:16) குறிப்பிடுவதுபோல அவருடைய நிறைவினால் நாம் கிருபை பெறுகிறோம். அது நம்மை நிறைவாழ்வுக்குள் நடத்தும். (The fullness of life can only be attained in our lives 'when we believe and obey Jesus Christ who is the only source of fulfillment' according to the preacher Rev.Dr. Billy Graham and as per the scripture quotes of Ps.23:5, Col.3 and Eph.3:16-19).

பவுல் அப்போஸ்தலரின் கூற்றுப்படியும், நம்பிக்கையின்படியும் கிறிஸ்து என்னும் தலையின் வழியாகவே அவரது திருஉடலாம் திருச்சபைக்கு நிறைவுண்டாகிறது. (எபே.1:23). இந்நிறைவை நாமும் பெறுவோம், நிறைவாழ்வை எல்லோரோடும் பகிருவோம். ஏற்றத்தாழ்வுகள், குறைவுகள் அனைத்தையும் நிறைவாக்க உழைப்போம். ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி,
சபை போதகர்.

## கடவுளின் மீட்பும் பெண்களின் பங்களிப்பும்
## (Partnership of women in the Salvation of God)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

தாயும் தந்தையுமாயிருக்கிற கடவுளின் நாமத்தில் புதிய மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதத்தைப் பெண்கள் சிறப்பு மாதமாக நாம் கொண்டாடுகிறோம். March மாதம் 8-ம் நாள் அகில உலகப் பெண்கள் தினமாகக் (March 8 - International Women's Day) கொண்டாடப்படுகிறது. உலகமெங்கிலும் பல்வேறு நிகழ்வுகளும், திருச்சபைகளில் சிறப்பு வழிபாடுகளும் "பெண் என்னும் பெரும்படைப்பை" நினைத்து அனுசரிக்கப்படுகின்றன. நாமும் இம்மாதத்தின் இரண்டாம் வெள்ளிக்கிழமை ஆராதனையை சிறப்பாக, பக்தியோடு, இறைசாயலை அனைவரிடமும் உணர்ந்து புரிந்து கொண்டாட இருக்கிறோம். இன்னமும் பெண் சிசு கொலைகளும், பாலியல் வன்முறைகளும், வரதட்சணைக் கொடுமைகளும், பெண் அடிமைத்தனமும் மலிந்து கிடக்கும் இந்த உலகிற்கு பெண்களின் பங்களிப்பை மீண்டும் நினைவுபடுத்துவது அவசியமாகிறது. கர்த்தர் நமக்குத் தந்த வாழ்வின் புத்தகமாகிய திருமறையிலிருந்து சில செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆதாமின் பாவத்திற்கு ஏவாளே காரணம் என்று கருதும் ஆணாதிக்கச் சமுதாயம், ஆண்டவர் இயேசுவின் பிறப்பு ஆண் துணையின்றி, பெண்ணின் வயிற்றிலிருந்து மட்டும் கடவுளின் அருளால் உருவானது என்று பேசுவதேயில்லை. மிரியாமுக்கு வந்த குஷ்டரோகத்தைக் குறை கூறும் இந்த சமுதாயம் மிரியாமின் விடுதலைப் பாடலை (யாத்.15) எத்தனைமுறை பாடியிருக்கிறது?! கிதியோனையும், சிம்சோனையும் நியாயாதிபதிகளாகப் பார்க்கும் அதே பார்வையில் தெபோராளை சமமாகப் பார்க்கிறோமா? திருமறையை மறுஆய்வு செய்யவும், புதிய பார்வையில் அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவ சமுதாய புத்தகமாக, வரலாறாக நம்பவும் அழைக்கப்படுகிறோம். அந்தபடியே கடவுளின் மீட்புத் திட்டத்தில் ஆண்களைப்போல பெண்களும் சற்றும் குறைவின்றி விசுவாசத்திலும், வீரத்திலும், விவேகத்திலும், விடுதலையிலும் பங்குபெற்றுள்ளார்கள் என்பதை மறந்து போக வேண்டாம். அப்படிப்பட்ட இரண்டு மகத்தான பெண்மணிகளே சிப்போராள், பூவாள் என்கிற எபிரெய மருத்துவச்சிகளாவார். அவர்களைப் பற்றிய அருஞ்செய்தி ஒன்றை பகிர்ந்துகொள்கிறேன்.

## 1.தைரியமான பங்களிப்பு (Daring Contribution) (யாத். 1:15-17):

யாக்கோபின் குடும்பம் யோசேப்பின் மூலமாய் எகிப்து தேசத்தில் பஞ்சம் நீங்கி நல்வாழ்வு பெற்றது. ஆனால் அந்தப் பார்வோனுக்கும், யோசேப்புக்கும் பிறகு எபிரெயர்களுடைய வாழ்க்கை நசுக்கப்பட்டது. அடுத்த பார்வோன் காலத்தில் அடிமைத்தனத்தின் கொடுமையில் அவர்கள் சிக்கித் தவித்தாலும் ஆண்டவர் அவர் தம் வம்சங்களை வாழவைத்து வழிநடத்தினார். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத பார்வோனும், எகிப்தியர்களும் (யாத்.1:12,13) அவர்களின் ஆண் பிள்ளைகளைக் கொலை செய்ய சூழ்ச்சி செய்தார்கள். அதுவே ராஜாவின் கட்டளையானது. இக்கட்டளையை மீறுகிறவர்கள் கொடுமையாகக் கொலைசெய்யப்படுவார்கள். ஆனாலும் பயப்படாமலும், தீமைக்குத் துணை நிற்காமலும் எபிரெய மருத்துவச்சிகளான சிப்போராளும், பூவாளும் எபிரெய ஆண் பிள்ளைகளை ராஜாவின் பொல்லாத கட்டளைக்குக் கீழ்படியாமல் தைரியமாய்க் காப்பாற்றியது எத்தனை பெரிய பங்களிப்பு! நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவருக்காக நாம் நமது பங்களிப்பை எத்தனை தைரியமாய் செய்கிறோம்? எண்ணிப் பார்ப்போம்.

"...உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள்... கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியம் அடைவார்கள்."

## 2. ஞானமான பங்களிப்பு (Wise Contribution) (யாத்.1:18,19):

தன்னுடைய கட்டளை மீறப்பட்டு விட்டதாக அறிந்த பார்வோன் அமைதியாகவா இருந்திருப்பான்? மிகுந்த கோபப்பட்டிருப்பான் அல்லவா? கோபத்துடன் இருக்கும் ராஜாவைச் சந்திக்கும்படி அழைக்கப்பட்ட மருத்துவச்சிகள் தைரியமாக மட்டுமல்ல, ஞானம் நிறைந்து செல்லுகிறார்கள். எபிரெய ஆண் பிள்ளைகளை உயிரோடே விட்ட காரணத்தை, ராஜா விசாரிக்கும்போது தாங்கள் போகும் முன்பதாகவே குழந்தை பிறந்துவிடுவதாக ஞானமாய் பதில் தந்து கடவுளின் மீட்புத் திட்டத்தின் பெரும்பங்காளிகளாக இன்றும் நினைவுகூறப்படுகிறார்கள். நாம் நம்முடைய அறிவையும், திறமையையும், ஞானத்தையும் யாருக்காக, எதற்காக பயன்படுத்துகிறோம் என்பதை எண்ணிப்பார்ப்போம்.

"ஞானமுள்ள பெண் தன் வீட்டைக் கட்டுகிறாள்"

## 3. நன்மையான பங்களிப்பு (Virtuous Contribution) (யாத்.1:20,21):

கடவுள் தந்த தைரியத்தையும், ஞானத்தையும் நன்மை செய்வதற்காகமாத்திரம் சிப்போராளும், பூவாளும் பயன்படுத்தினார்கள். அதுவும் பிறர் நன்மைக்காக! தங்களுக்குத் தீமை ஏற்பட்டாலும் பிறருக்கு நன்மை செய்ய அர்ப்பணித்தது எத்தனை பெரிய பங்களிப்பு!

அப்படிப்பட்டவர்களைக் கர்த்தர் கைவிடவில்லை. மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார், அவர்கள் குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார். நமக்குத் தீமை ஏற்பட்டாலும் பரவாயில்லை, பிறருக்கு நன்மை செய்வோம் என்கிற எண்ணம் நமக்கு உண்டா? அப்படியிருப்பின் கர்த்தர் நமக்கும் நன்மை செய்வார். தீமையிலிருந்து விலக்கிக் காப்பார்.

"நன்மை செய்வதில் சோர்ந்துபோகாதிருங்கள்"

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,
பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## Church of South India, Tamil Parish, Dubai.

# VBS 2018

**Date :** March 16- 24 **Time :** 4:00pm to 7:00pm

**Theme :** CRAFTED BY GOD, BUILT FOR A PURPOSE.

**Venue :** Holy Trinity Church, Dubai

## திருமறைப் பாட ஒழுங்குகள் - மார்ச் 2018

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-03-2018 | இடைவிடாமல் இறைவேண்டல் | 2 இராஜா. 20:1-11 | 1 தெச. 5:12-22 | மாற்கு 7:24-30 | 116 |
| 09-03-2018 பெண்கள் சிறப்பு வழிபாடு | இறைமீட்பும் பெண்கள் பங்களிப்பும் | யாத்தி. 1:15-22 | ரோமர் 16:1-16 | மாற்கு 15:37-41 | 148 |
| 16-03-2018 | மேசியாவின் காலமும் புதிய தரிசனமும் | உபாகமம் 18:15-22 | 2 கொரிந். 1:3-11 | லூக்கா 18:35-43 | 73 |
| 23-03-2018 குருத்தோலை வெள்ளி | ஓசன்னா: ஆலயத்தில் புதிய அரசர் | ஏசாயா 56:1-8 | 1 கொரிந். 3:16-23 | மத்தேயு 21:1-17 | 24 |
| 30-03-2018 பெரிய வெள்ளி | சிலுவை: மரணத்தின் மரணம் | எண்ணா. 21:1-9 | 1 கொரிந். 15:50-58 | மத்தேயு 27:1-56 | 22 |

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

### "பொல்லாப்பு உனக்கு நேரிடாது" சங்கீதம் 91:10

விடியற்கால வெளுப்பைப்போல, நம் சுகவாழ்வை துளிர்க்கப்பண்ணுகிற நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த வருட லெந்துநாட்களில் ஜெபத்தோடும், உபவாசத்தோடும் தேவனுக்குக் காத்திருக்கின்ற நமக்கு, ஆண்டவர் தரும் அருள்வாக்கு : "பொல்லாப்பு உனக்கு நேரிடாது". பொல்லாங்கனாகிய பிசாசு, அனேக உபாய தந்திரங்களையும், அக்கினியாஸ்திரங்களையும் நமக்கு எதிராக போராட அனுப்பும்போதும், நமக்கு எதிராக மனிதர்கள் பொல்லாப்பு செய்ய நினைக்கும்போதும் ஆண்டவர், அந்த பொல்லாப்புகள் நமக்கு நேரிடாதபடி காக்கிறார். விசேஷமாக, இந்த உபவாச நாட்களில், உபவாசித்து ஜெபிக்கின்ற நமக்கு ஆண்டவர் இதை உரிமையாக்கித் தந்து ஆசீர்வதிப்பாராக.

**1. பொல்லாத மனுஷனை மாற்றும் உபவாசம் (அப்.9:9):** பொல்லாத மனுஷனாகிய சவுலை, தேவன் சந்தித்தார். தேவனால் சந்திக்கப்பட்ட அவன், மூன்றுநாள் உபவாசம் இருந்தான் (9:9). ஆண்டவரால் சந்திக்கப்பட்ட வாழ்வில், உபவாசமும், ஜெபமும் முக்கியம் பெறவேண்டும். ஆண்டவர் அனனியாவை சவுலிடம் அனுப்பும்போதும், "சவுல் இப்பொழுது ஜெபம் செய்கிறான். ஆகையால் அவன் இனி பொல்லாதவன் அல்ல (வ.11), என் நாமத்தை அறிவிக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம் (வ.15)" என்றார். அனனியா கர்த்தரிடம் சவுலை பொல்லாங்கு செய்கிறவன் என்றபோது (வ.13), "என் ஆவியை அவனுக்குக் கொடுப்பேன், இனி அவன் பொல்லாங்கு செய்வதில்லை, அவனை மாற்றினேன்" என்றார் (வ.17).

அன்பானவர்களே, நம் வாழ்வில் காணப்படும், எந்தவிதமான பொல்லாங்கான குணங்களையும் மாற்றும் வல்லமை உபவாச ஜெபத்திற்கு உண்டு. உபவாசித்து ஜெபிப்போம். மேன்மேலும் பரிசுத்தப்படுவோம். அவருக்குச் சாட்சியாக வாழ்வோம்.

**2. பொல்லாத காற்றுக்கு தப்பச்செய்யும் உபவாசம் (அப். 27:9):** பவுலின் ரோமாபுரி பயணத்தில், ஒரு பொல்லாத காற்று வருகிறதை, ஆண்டவர் உபவாச நாளிலே பவுலுக்குக் காண்பிக்கிறார் (வ.9). இந்த பொல்லாத கடுங்காற்று (வ.14) கடந்து போகும்மட்டும் (வ.8) நல்ல துறைமுகத்திலே

காத்திருக்கும்படிக்கும், தொடர்ந்து ஜெபத்திலே உறுதியாய் இருக்கும்படிக்கும் பவுல் எச்சரிக்கிறார். ஏனென்றால், உபவாசித்த நாளில் பவுல், அந்த கடுங்காற்று கப்பல், பொருள் மற்றும் உயிருக்குச் சேதம் ஏற்படுத்தும் (வ.10) என்பதைக் காண்கிறார்.

நல்ல துறைமுகம் என்பது ஆலயமே. தேவாலயத்தில் அடைக்கலமாய் இருக்கின்ற நாம் ஜெபத்திலும், உபவாசத்திலும் தொடர்ந்து தரித்திருந்தால், பொல்லாத சேதத்தை உண்டாக்கும் காற்றுக்கு ஆண்டவர் தப்பச் செய்வார். வாதை நம்மை அணுகாது. ஆனால் பவுலின் எச்சரிப்பை அசட்டை செய்ததால், பெரிய சேதம் உண்டாகி தத்தளிப்பும், வருத்தமும், பயமும் அவர்களை நிரப்பிற்று. உபவாசித்து ஜெபிப்போம். ஜெபிக்கும்போது தேவன் (நல்ல துறைமுகம்) நமக்கு அடைக்கலமும், கோட்டையுமாக இருப்பதை உணர்வோம். கடுங்காற்று கடந்து செல்லும்வரை அந்த அடைக்கலத்துக்குள் தஞ்சம் புகுவோம்.

**3. பொல்லாங்கனை ஜெயிக்கும் உபவாசம் (அப். 13:10):** அந்தியோகியா பட்டணத்தில் பவுலும், பர்னபாவும், வேறு சிலரும் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருந்தபோது (வ.1,2), பவுலையும், பர்னபாவையும் தேவன் பிரித்தெடுக்கிறார். பிரித்தெடுக்கிற அவர்களுக்கு தேவன் பொல்லாங்கனை ஜெயிக்கிற கிருபையைத் தருகிறார். அந்த கிருபை பாப்போ பட்டணத்தில் ஊழியம் செய்தபோது பவுலுக்கு வெளிப்படுகிறது. தேவவசனத்தை ஆசையாய் கேட்கவிடாதபடிக்கும், செர்கியுபவுல் என்னும் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படிக்கும் பொல்லாங்கனாகிய எலிமா வருகிறான் (வ.6-10). நீதிக்கெல்லாம் பகைஞனாகிய எலிமாவை, கர்த்தருடைய கரத்தின் வல்லமைக்கு ஒப்புக்கொடுக்கும்போது, பொல்லாங்கனை ஜெயிக்கிற கிருபை விளங்கிற்று (வ.11). எலிமா விழுந்தான். அதிபதி விசுவாசித்தான் (வ.12).

நமக்குள் விசுவாசம் துளிர்விடாதபடி, வசனத்தை ஆசையாய் கேட்கவிடாதபடி, பொல்லாங்கனாகிய பிசாசு அவ்விசுவாசத்தை விதைக்க எப்போதும் போராடுகிறான். இந்தப் பொல்லாங்கனை ஜெயிக்க உபவாசித்து ஜெபிப்போம். வசனத்தை ஆசையாய்க் கேட்டு விசுவாசத்தில் வேரூன்றுவோம்.

இம்மாதத்தில் உபவாசித்து ஜெபிக்கின்ற நமக்கு, தேவன் நமக்குள் காணப்படும் பொல்லாத குணங்களை மாற்றி, பொல்லாங்கனை ஜெயிக்கிற கிருபையைத் தந்து, பொல்லாத காற்றுக்குத் தப்பும் அடைக்கலமாக வெளிப்பட்டு நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.
ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட். உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

அடுத்த வாரம் அவர்களுடைய சபையில் VBS துவங்கயிருந்தது. Scripture Union-ல் இருந்து அண்ணன்மார், அக்காமாரெல்லாம் வந்து, நமக்கு ஆண்டவரின் அன்பைக் குறித்து அதிகமாக உணரும்படி நமக்குக் கற்றுத்தர இருக்கிறார்கள் என Junior Church Incharge ஏஞ்சல் சொன்னதும் சுனிதாவுக்கு ஒரே சந்தோஷம்! Super, Sam அண்ணனைப் பார்க்கலாம்! நல்ல பாடல்கள் பாடலாம், கதை கேட்கலாம் என VBS பற்றிய நிகழ்வுகளை நினைத்து மகிழ்ச்சியானாள் சுனிதா. ஆனால், ஏஞ்சல் கூறிய ஒரு காரியம் அவளுடைய மகிழ்ச்சியைப் பறித்துவிட்டது.

“பிள்ளைகளே, VBS-க்கு வரும்போது, நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் தோழிகள், நண்பர்களிடம் இயேசு சுவாமியைப் பற்றி சொல்லி, ஆளுக்கு ஒருவரையாவது அழைத்து வரவேண்டும்” என்றார்கள். எல்லாரும் உற்சாகமாக “சரி டீச்சர்” என்று குரல் கொடுத்தார்கள்.

சுனிதாவோ, தலையைக் குனிந்துகொண்டாள். உற்சாகமாக வேதாகமத்தை வாசிப்பதற்கும், பாட்டு பாடுவதற்கும் அவள் ஆயத்தமாக இருந்தாள். ஆனால் மற்றவர்களிடம் எப்படிச் சொல்வது? என அவள் தயங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட ஏஞ்சல் டீச்சர், என்ன சுனிதா உனக்கு வெட்கமாக இருக்கிறதா? என கேட்டார்கள். சுனிதா ஒன்றுமே பதில் சொல்லவில்லை. அப்படியானால் மற்றவர்களிடம் இயேசு சுவாமியைப் பற்றி சொல்ல பயப்படுகிறாயா? என்றார்கள் ஏஞ்சல் டீச்சர். அதற்கும் பதில் இல்லை.

7-வது வகுப்பு படிக்கிறாய். உன்னுடைய தோழிகளிடம் இயேசு சுவாமியைப் பற்றிச் சொல்வதற்கு என்ன பயம்? இயேசப்பாவிடம் ஜெபம் செய்துவிட்டு முயற்சி செய். அவர் உன்னைப் பெலப்படுத்துவார் என்றார் டீச்சர். இப்போது சுனிதா மெதுவாக தலையாட்டினாள். என்றாலும் அவளுடைய தயக்கம் தீரவில்லை.

வீட்டுக்கு வந்தவுடன் அவள் தன் அம்மாவிடம் இதைக் குறித்து கூறினாள். ‘ஏண்டி, school bus-ல், நாம் தங்கியிருக்கும் இதே apartment-ல் இருந்து எத்தனையோ பேர் உன்னோடு வருகிறார்கள். அவர்களில் உனக்குத் தோழி யாரும் இல்லையா?’ என அம்மா கேட்டார்கள். அது...... வந்து.......

தமிழ்ச்செல்வி இருக்கிறாள் என்று தயங்கியபடியே பதிலளித்தாள் சுனிதா. அவளைக் கூட்டிக்கொண்டு போ என அம்மா கூறினார்கள். இல்லை அம்மா, அவள் அதற்குப்பிறகு பேச்சை நிறுத்திக்கொண்டால் என்ன செய்வது? எனக் கேட்டாள் சுனிதா. அவள் ஏன் தயங்குகிறாள் என அம்மாவுக்கப் புரிந்தது.

இயேசு சுவாமி, 'நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' எனச் சொல்லியிருக்கிறார். சாட்சி கூறுவதை நாம் ஒரு கடமையாகச் செய்யக்கூடாது. நாம் அதை மகிழ்ச்சியோடு செய்யவேண்டும். மற்றவர்களும் இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெறவேண்டும் என்ற வாஞ்சையோடு சாட்சி கூறவேண்டும். இதில் நம்மைப் பெலப்படுத்து வதற்காக ஆண்டவர் நமக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுத்திருக்கிறார் என அம்மா சொன்னபோது சுனிதாவுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது.

வா ஜெபிப்போம் எனக் கூறிய அம்மா, 'ஆண்டவரே, உம்மைப்பற்றி மற்றவர்களுக்குச் சொல்லும் தைரியத்தை இவளுக்குக் கொடுத்தருளும், ஆமென்' என ஜெபித்தார்கள். அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை. School Bus-ல் ஏறின தமிழ்ச்செல்வியிடம், மனதில் ஜெபித்துக்கொண்டே, சுனிதா, 'வரும் வெள்ளிக்கிழமை எங்கள் Church-ல் VBS துவங்குகிறது. பாட்டு பாடுவார்கள், நாடகங்கள் நடித்துக் காட்டுவார்கள், வேதாகமத்தைச் சொல்லிக் கொடுப்பார்கள், நீயும் வருகிறாயா' எனக் கேட்டாள்.

அப்படியா, நான் என் அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேனே என தமிழ்ச்செல்வி கூறினாள். அவள் வரவேண்டுமென சுனிதா ஊக்கமாக ஜெபித்தாள். அடுத்த நாள், செல்வி வந்து தன் அம்மா permission தந்ததைக் கூறினாள். VBS-க்கு செல்வி தன் பக்கத்து வீட்டுச் சிறுமிகள் இருவரையும் தன்னுடன் அழைத்து வந்திருந்தாள். இயேசு சுவாமியைப் பற்றிச் சொல்லுவதைச் செல்வி ஆவலாகக் கேட்பதை சுனிதா கவனித்தாள். "ஆண்டவரே, அவளுடைய இருதயத்தில் கிரியை செய்யும்" என அவள் மௌனமாக ஜெபித்தாள். எப்படியும் செல்வி இயேசப்பா பிள்ளையாக மாறுவாள் என்ற நம்பிக்கையோடு அவள் தேவனைத் துதித்தாள்.

**வேதவாசிப்புப் பகுதி : சாட்சி கூறிய பிலிப்பு** அப்போ. 8:26-40
**மனப்பாட வசனம் :** அப்போ. 1:8

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃ.பர் ஆல்வின், உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

இஸ்ரவேலின் தேவன் நம்மை உறங்காமல் காத்து வருகிறதற்காக அவருக்கு நன்றியையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்துகிறேன். அவருடைய இரக்கத்தினாலே இவ்வருஷத்தின் இரு மாதங்களை வெற்றியோடு கடந்து வர தேவன் கிருபை செய்தார். இனிவரும் மாதங்களும் நமக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

பிப்ரவரி மாதம் 9-ம் தேதியன்று, திருச்சபையாக நாம் தாங்கிவரும் தமிழ் நாடு இறையியல் கல்லூரியின் முதல்வர் Rev. Dr. David Rajendran அவர்கள் தேவசெய்தி கொடுத்து நம்மை ஆராதனைக்குள் வழிநடத்தினார்கள். நம்முடைய சிறுவர் பாடசாலை உபயோகத்திற்காக software மற்றும் சில TABS திருச்சபையாரால் நன்கொடையாக வழங்கப்பட்டது. அதை நமது ஆயர் ஜெபித்து சமர்ப்பித்தார்கள். அன்று மாலை ஜெபல் அலி ஆராதனையில் Rev. Dr. Peter Singh அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். அவர்களுக்குத் திருச்சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிப்ரவரி 14-ம் தேதியன்று, சாம்பற் புதன் கிழமை சிறப்பு ஆராதனையின் மூலமாக லெந்து காலங்களுக்குள்ளாகப் பிரவேசிக்க தேவன் கிருபை செய்தார். திருச்சபையார் இக்காலங்களில் மிகுந்த ஜெபத்தோடும் உபவாசத்தோடும் தேவ சந்நிதானத்தில் நெருங்கிச் சேருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிப்ரவரி 16-ம் தேதியன்று, இந்திய மிஷினரி சங்கத்தின் பொது காரியதரிசி Rev. J. Kingsly John Stephen அவர்கள் காலை ஆராதனையில் தேவசெய்தி கொடுத்து ஊழியங்களைப் பற்றி பகிர்ந்து கொண்டார்கள். அவர்களோடு இணைந்து IMS இயக்கத்தின் பங்காளர்களும் மற்றும் மூப்பர்களும் பங்குபெற்றார்கள். இவ்வாராதனையில் உலக திருமண நாள் தினத்தை நினைவு கூர்ந்து, தேவ சந்நிதானத்தில் நம் திருமண வாக்குறுதிகளை மீண்டும் நினைவுகூர்ந்து குடும்பமாக அதை மறுமொழிய தேவன் கிருபை செய்தார். திருச்சபையார் தங்கள் கைகளில் வழங்கப்பட்ட திருமண வாக்குறுதியைக் கணவன் மனைவியாகச் சேர்ந்து ஜெபித்து கையொப்பமிட்டிருப்பீர்களென்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். தெய்வீகத் திருமணத்தின் நோக்கத்தைத் தேவன் நம் திருச்சபையின் குடும்பங்களில் நிறைவேற்ற வேண்டுகிறேன். மல்கியா 2:15, எரேமியா 29:11.

பிப்ரவரி 24 சனிக்கிழமையன்று, திருநெல்வேலி பேராயத்தைச் சேர்ந்த Rev. Gibson Johndas ஆயர் அவர்கள் நமது காலை ஆராதனையில் தேவசெய்தி கொடுத்தார்கள். அவர்களுக்குத் திருச்சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது திருச்சபையின் விடுமுறை வேதாகமப் பள்ளி (VBS) மார்ச் மாதம் 16 முதல் 24 வரை நமது ஆலய வளாகத்தில் நடைபெற உள்ளது. அதன் முன்பதிவு விண்ணப்பப்படிவம் (Registration Form) திருச்சபையின் வலைதளத்தில் (website) உள்ளது. சபையார் தங்கள் பிள்ளைகளின் விபரங்களை மார்ச் மாதம் 3ஆம் தேதிக்குள்ளாக நிரப்புமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம். இதைப் பொறுப்பெடுத்து நடத்தும் Miss. Mary Stella Gnanamuthu அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து செயல்படும் ஆசிரியர்களுக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் திருச்சபையார் ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதத்தின் அனைத்து நிகழ்வுகளுக்காகவும், விஷேசமாக நம் விடுமுறை வேதாகமப் பள்ளிக்காகவும் (VBS), பரிசுத்தவார ஆராதனை அனைத்திற்காகவும் ஜெபிக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Delvin Dennis | 2753 | Dubai |
| 2 | Mr. Arul Emrold Peter | 2754 | Dubai |
| 3 | Mr. B.Jeyakumar | 2755 | Dubai |
| 4 | Mr. Ligin P. | 2756 | Dubai |
| 5 | Mr. S.Christopher | 2757 | Dubai |
| 6 | Mr. Aneesh C. | 2758 | RAK |
| 7 | Mr. Jegan Raj P. | 2759 | Dubai |
| 8 | Mr. Jeya Seelan George | 2760 | Dubai |
| 9 | Mr. Koil Dhasan Paul Durai | 2761 | Dubai |
| 10 | Mr. Jeba Seelan Yaccobu | 2762 | Dubai |

# கிழர் துளிர் வசந்தம்!

பெத்தானியர் நகரம் பக்தியானோர் சேரவும்
பந்தமுள்ள வீடும் பந்திக்கென்ற தேர்வும்
சித்தமான இயேசும் சேர்ந்துவந்த சீடரும்
பட்டண ஓரம் பின்மாலை நேரம்

இறுதிப் பஸ்கா பெறுவது வருத்தம்
அறிந்து இயேசும் அறியாச் சீசும்
உறுதியாய்க் கூறிய உணர்ச்சிப் பேச்சும்
மறையைத் திறந்து உரையை விரித்ததாம்

பேச்சும் புசிப்பும் வந்திச்சாம் போச்சாம்
நெஞ்சம் அஞ்சும் நஞ்சாய் ஒருசொல்லாம்
பேச்சிடை புகுந்த அச்சொல் "என்னையும்
காட்டிக் கொடுக்கப் போரான் ஒருவனும்"

கொதித்தனர் கொப்பளித்தனர் "நானோ நானோ"
தவித்தனர் துடித்தனர் தெரிந்திடக் கயவனை
புதிராக அதிர்வாக "நானோ" புதியவன்
"ஆமாம்" இயேசு அவன்தான் யூதாஸ் !

பந்தி அந்தம் தந்தார் அப்பம்
வாழ்த்துப் பலித்துப் பிட்டது அப்போம்
பிந்தித் தந்தார் பானப் பாத்திரம்
போற்றிப் புனிதம் பகிர்ந்தார் பத்திரம்

அப்பமே இப்போம் அவர்சரீர ஒப்பமாம்
பானம் முழுதும் ரத்தம் போலவாம்
இப்போம் பாவம் மீட்கும் புத்தம்
புதிதாய் உடன்படிக்கை தமக்கும் நமக்கும்

ஒலிவமலைச் சாரல் ஒளிஒளித்த இரவில்
தோத்திரம் பாடினர் ஆத்திரம் புறப்பட்டனர்
மலையும் இருளின் நிலையும் கிலியில்
ஒன்றாய் வந்தனர் கெத்சமனே தோட்டத்தில்

துக்கத்தின் விளிம்பில் இயேசு ஜெபத்தில்
சீடர் தூக்கத்தின் உச்ச கட்டத்தில்
திக்..திக்.. இரவில் யூதாஸ்வாய் முத்தத்தால்
மாட்டினார் இயேசு பாவிகள் கைகளில்

வறண்ட காலம் உருண்ட சருகுகள்
வசந்த காலம் துளிர்ப்பது போல
தொற்றும் துக்க காலம், பாவம்
விட்டு நன்மை பெற்று எழுவோம் !

ஆதாரம் : மத்தேயு 26.
கவிதை எண் : 206.
ஆக்கம் : மணிமுத்து.

## சோதனையில் சாதனை

அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே,
அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய
வல்லவராயிருக்கிறார். ஏபிரெயர் 2:18

சோதனை வேளையில்
தவித்திடும் நெஞ்சிற்கு
உருக்கமாய் இரக்கம் காட்ட
அன்பின் நாதர் இயேசுவை
நாம் நாடிச் செல்லுகையில்
பாசமாய் அணைத்து
தம்மோடு நேச கரத்தில்
எம்மை ஆதரிப்பார் - ஏனெனில்
இயேசுவும் சோதிக்கப்பட்டார்
பாடுகளை அனுபவித்தார்
பாரினில் வெற்றிச் சிறந்தார்
நொருங்கும் உள்ளம் கண்டு
தயக்கம் என்ன கேட்டு
உலகில் நம்சிந்தை மகிழ
சிறப்பாய் வாழ
சோதனையை சாதனையாக மாற்ற
நித்தம் நமக்கு உதவுவார் - இயேசு

S.ஷீபா ஞானவின்சா ஸ்பர்ஜன்

## யாக்கோபு

யூதா தன்னுடைய தகப்பனாரின் வேலைக்காரரில் ஒருவரை அழைத்து, "நீ போய், நமக்கு விரோதமாக வரும் அரசர்கள் எங்கே தங்கள் பரிவாரங்களோடு இருக்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டு வா" என்றான். அந்த வேலைக்காரன் வெகுதூரம் சென்று சீகோன் எனும் மலையின் மேல் ஏறி அவர்களின் எல்லாப் பாளையத்தையும் வயல்வெளிகளில் கண்டு, திரும்பி யூதாவிடம் வந்து, "இதோ அவர்கள் வயல்வெளிகளில் தங்கியுள்ளார்கள். அவர்களின் எண்ணிக்கையோ கடற்கரை மணலத்தனையாய் உள்ளது" என்றான்.

யூதா, சிமியோனையும், லேவியையும், மற்ற சகோதரரையும் அழைத்து, "பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள். ஏனெனில் நம் தேவனாகிய கர்த்தர் நம்மோடிருக்கிறார். நீங்கள் எழுந்து, அவரவர் தங்கள் வில், அம்பு மற்றும் போர் ஆயுதங்களை தரித்துக்கொண்டு, இந்த விருத்தசேதனமற்ற மக்களை எதிர்ப்போம். நம்முடைய தேவன் நம்மை தப்புவிப்பார்" என்றான்.

யாக்கோபின் குமாரர் தங்கள் தங்கள் ஆயுதங்களை அணிந்து போருக்கு ஆயத்தமாயினர். அவ்வேளையில் ஈசாக்கோடேயிருந்த ஈசாக்கின் வேலைக்காரர் அனைவரும் எபிரோனிலிருந்து, போர் ஆயுதங்களோடு வந்து சேர்ந்தனர். நூற்று பன்னிரண்டு பேராய் இவர்கள் அரசர்களை எதிர்த்துச் சென்றனர். யாக்கோபும் தன் குமாரரோடே புறப்பட்டார். அவர்கள் எபிரோனிலிருந்த ஈசாக்கினிடத்தில் ஆட்களை அனுப்பி, தேவனாகிய கர்த்தர் தங்களைக் கானானியரின் கைக்குத் தப்புவிக்கும்படி வேண்டுதல் செய்யுமாறு கூறினார்கள்.

ஈசாக்கு தேவனை நோக்கி, "கர்த்தாவே, நீர் உமது அடியவராகிய என் தகப்பனிடம், வானத்து நட்சத்திரத்தைப் போல உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன் என்று வாக்குக் கொடுத்தீரே, இப்போதும், உம்முடைய வாக்கை இந்த நேரத்திலே உறுதிசெய்யும். இக்கானானியரின் கைக்கு விடுவியும். தேவனாகிய கர்த்தாவே, நீர் அந்த அரசர்கள் தங்கள் பெருமைகளைக் களைந்து, எங்கள் பிள்ளைகளைவிட்டு திரும்பச் செய்யும். நீர் உமது ஓங்கிய புயத்தினாலே எங்கள் பிள்ளைகளையும் அவர்கள் வேலையாட்களையும் விடுவியும். ஏனெனில் வல்லமையும் பராக்கிரமமும் உம்மிடமன்றோ உள்ளது" என்று விண்ணப்பம் செய்தார்.

இதற்கிடையில் அரசர்களை எதிரிட்டுச் செல்கையில் யாக்கோபும், தேவனை நோக்கி, "கர்த்தாவே, மகிமையும் வல்லமையும் நிறைந்தவரே, நீர் அன்றுமுதல் இன்று வரை அநாதியாக இருக்கிறீர். நீரே யுத்தங்களை ஏற்படுத்தி அதை முடியச் செய்கிறவர். உம்முடைய கரத்திலே வல்லமையும், பராக்கிரமும் உள்ளது. நீர் என் விண்ணப்பத்தைக் கேட்டு, எங்களுக்குத் தயை செய்து, அவ்வரசர்கள் மனதிலே எங்கள் பிள்ளைகளைக் குறித்தக் கலக்கத்தை உண்டாக்கும். உம்முடைய காருண்யத்தால் உம்மையே நம்பியுள்ள உம்முடைய பிள்ளைகளை விடுவித்தருளும்" என்றார்.

அம்மோரிய அரசர்கள் வயல்வெளியில் ஒன்றுகூடி தங்கள் ஆலோசகர்களை அழைத்து, யாக்கோபின் குமாரரை என்னச் செய்யலாம் என ஆலோசனை நடத்தினர், ஏனெனில் யாக்கோபின் குமாரர் இருவர் சீகேம் பட்டணத்தையே நிர்மூலமாக்கிவிட்டனரே என்று ஏற்கனவே மிகுந்த கலக்கத்தில் இருந்தனர்.

தேவனாகிய கர்த்தர் ஈசாக்கு மற்றும் யாக்கோபின் ஜெபத்தைக் கேட்டருளி, அவர்கள் மனதிலே பெரும் கலக்கத்தை உண்டு பண்ணினார். இந்த எபிரெயர்களிடம் சண்டையிட்டு ஏன் நாம் நம்முடைய அழிவையே காணவேண்டும்? இரண்டு பேரோடு போரிட்டு வெற்றி பெற சீகேமியரால் முடியாதபோது, நாம் எம்மாத்திரம்? நிச்சயமாக அவர்கள் தேவன் அவர்கள்மேல் பிரியமாயிருக்கிறார். அவர்களுக்காக பெரிய காரியங்களைச் செய்கிறார். நம் நாட்டிலே உள்ள தெய்வங்களால் செய்யமுடியாத பல அரிதானவைகளைச் செய்கிறார். அவர் ஆபிரகாமை விடுவித்தார். இந்த எபிரெயரை பலரது கைக்கும் விடுவித்தார். அவர் கண்டிப்பாக நம்முடைய கைக்கும் அவர்களை விடுவிப்பார் என்றார்கள். இதைக் கேட்ட அமோரிய அரசர்கள் பயத்தோடு கலந்த பீதியிலே, நிறைந்தவர்களாய் யாக்கோபின் குமாரரைக் குறித்து கலக்கமுற்றனர். எனவே அவர்கள் யாக்கோபை நோக்கி முன்னேறாமல் திரும்பிவிட்டனர்.

கர்த்தர் தம்முடைய அடியவராகிய ஈசாக்கு மற்றும் யாக்கோபின் விண்ணப்பத்திற்கு செவிமடுத்து, அவர்கள் அவரையே நம்பினபடியால், அவர்களை சுகமாய் திரும்பிப் போகப் பண்ணினார். யாக்கோபின் குமாரர் சாயங்காலமட்டும் சீகோன் மலையின் எதிர்முனையில் நின்று அவ்வரசர்கள் திரும்பி வருகிறார்களா என்று பார்த்து சமாதானத்தோடே தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பினார்கள்.

தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## THE WAY OF THE CROSS

It was a Good Friday.
I saw news clips of people going on a procession, reciting prayers, carrying a wooden cross through the narrow streets .....
The cross seemed very light to carry...They took turns to carry the wooden cross and led the procession.
Thus they remembered the sufferings and pain of Jesus on the road to Calvary....
Contrary to the scene that I watched, I pondered about the First Good Friday,
Is this the way Jesus carried the cross for us on the road to Calvary?
Is this the CROSS that Jesus asked us to carry???? I wondered.

**Do you Know???**
The man named Simon, from Cyrene was compelled by Roman Soldiers to carry the cross for Jesus. – Mark 15:21

When Jesus foretold His disciples about His sufferings and death, He said, "If anyone DESIRES to come after Me, he must deny himself and TAKE UP HIS CROSS DAILY and follow Me. For whoever wants to save his life will lose it and whoever loses his life for My sake will find it....." Luke 9:23, 24
When I was young, I misunderstood that the above verse is meant only for Evangelical ministers and not for an ordinary believer like me. Read the above verse again and understand it is clearly meant for ANYONE WHO DESIRES TO FOLLOW JESUS.

The cross that Jesus meant was all about denying our self will and fulfiling God's will even though it is not the cup that we long for...
Jesus Himself showed us the WAY...
It's the WAY of the OLD RUGGED CROSS ....
It's the WAY of SUFFERING, PAIN, SHAME, LOSS, BLOOD SHED, PERSECUTION, DEATH....
Jesus was led by His tormentors like a LAMB TO BE SLAIN,
All through the way, HE WAS BEATEN with ROD,
He was WHIPPED with IRON NAILS, He was SLAPPED,

They laid a CROWN OF THORNS that pierced His brow,
Even though He had the power to do miracles and destroy all the persecutors, He endured it all patiently as though He was stripped of all authority...

**Do you Know???**
Cyrene is a place in Eastern Libya, N.Africa. Simon who carried the cross reluctantly, then carried the Gospel message to his natives. Simon's sons Alexander and Rufus were christian converts of the early Church in Cyrene.

He was insulted by the religious leaders,
Yet He did not speak a word against them,
He was even rejected by His own people,
The pain of being rejected and forsaken by our own people, is the most heartbreaking thing anyone can endure...Yet Jesus endured it all patiently.
Just for ONE REASON - TO FULFILL THE FATHER's WILL
So that He will make a way for us to go to Heaven by paying our penalty...
Everyone must have thought that was the END.
The enemies must have rejoiced that they have defeated Jesus.
But Jesus accomplished HIS FATHER's WILL!
And delivered man from the clutches of the enemy...
AND HE ROSE AGAIN FROM THE DEAD VICTORIOUSLY!!!

As I pondered on the sufferings of Jesus,
I asked myself,"Am I carrying the cross daily in the same way Jesus carried and showed me the way? Am I totally committed in accepting God's will and forsaking mine at any cost? Am I enduring the suffering patiently in order to accomplish my Heavenly Father's will in my life? How am I responding when I'm rejected or forsaken by people close to me?"

As I pondered more about this, it seemed too heavy a cross for me carry but Christ has already accomplished victory over everything
That' the assurance we have dear young friends, Jesus is with us every moment and we can do all things through Christ who strengthens us. We don't have to carry the cross reluctantly but willingly we can carry the Cross and lead a victorious life accomplishing God's purpose in our life. Thus we can make a difference wherever we go. Will you carry the cross daily and follow Jesus?

# திருச்சபை ஜெபநாள் 04-03-2018 (முதல் ஞாயிறு)

"சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும், யாக்கோபின் தேவனே, செவிகொடும்." சங்கீதம் 84:8

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- கர்த்தருடைய கிருபையால் கடந்த மாதத்தில் திருச்சபையின் திருப்பணிகள், ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றதற்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- நடைபெறவுள்ள பெண்கள் ஆராதனைக்காகவும், VBS ஆயத்தங்களுக்காகவும், முழு ஆண்டுத்தேர்வு எழுதும் எல்லா மாணவர்களுக்காகவும், குறிப்பாக 10–வது, 12–வது எழுதும் மாணவர்களுக்காகவும் ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.

"கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து,
உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்." சங்கீதம் 85:7

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# பேரீச்ச மரம்

